கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 62/2012

வாதி தரப்பு சாட்சி-1 பர்வீன் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 21.08.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பர்வீன் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | மகபூப் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 55 |

**1 முதல் 4 மற்றும் 8 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. ஏற்கனவே இவ்வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஏற்கனவே அளித்த சாட்சியத்தை மீண்டும் தற்போதும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 11.12.2017 ல் 3 ம் வாதிக்கு 1, 2 , 4, 5 வாதிகள் சேர்ந்து ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். 1ம் வாதி எனது தாயார். அவர் வழக்கிற்கு பிறகு இறந்துவிட்டார். எனது தாயாருக்கு 2 முதல் 5 வாதிகளும், 20 பிரதிவாதியும் வாரிசுகளா என்றால் சரிதான். 20 ம் பிரதிவாதி இவ்வழக்கில் தாக்கல் செய்த பதிலுரையில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்களில் தனக்கும் உரிமை இருப்பதாக எதிர்வாதம் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. நாங்கள் தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்த 11.12.2017 ம் தேதி அன்று நீதிமன்றத்தில் வாய்தா போடப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

2. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு மூல ஆவணமாக எனது தாத்தா கிரையம் பெற்ற பதிவு செய்யாத 20.07.1971 தேதியிட்ட கிரைய ஆவணத்தை காட்டியுள்ளோம் என்றால் சரிதான். இவ்வழக்கு 2012 ல் தாக்கல் செய்து அதில் சொல்லப்பட்டுள்ள அளவுகள் ஆவணங்களில் உள்ள அளவுகள் அனைத்தையும் தெரிந்து கொண்டு தான் பிரதிவாதிகள் எதிர்வாதம் செய்கின்றனர் என்றால் சரிதான். பிரதிவாதிகள் ஆரம்பம் முதலே கிழமேல் தென்வடல் அளவுகளை ஆட்சேபனை செய்து தான் எதிர்வாதம் செய்கின்றனர் என்றும், பதிவு செய்யப்படாத 20.07.1971 ம் தேதியிட்ட ஆவணத்தை உறுதிபடுத்த தான் 11.12.2017 ல் இவ்வழக்கிற்காக ஒரு தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல.

3. 11.12.2017 ல் 3 ம் வாதியின் பெயரில் செட்டில்மெண்ட் ஏற்பட்ட பின்னிட்டு அவர் அந்த ஆவணத்தை பயன்படுத்தி குளித்தலை இந்தியன் வங்கியில் கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் வில்லங்கம் ஏற்படுத்தும் நோக்கத்தில் தான் 3 ம் வாதி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணமும், அதனை தொடர்ந்து கடன் ஆவணங்களும் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பதிலுரையில் 20.07.1971 ம் தேதியிட்ட ஆவணத்தை ஆட்சேபனை செய்துள்ள நிலையில் நான் இவ்வழக்கில் விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்குபின்னிட்டு தாவா சொத்துக்களில் செட்டில்மெண்ட், வங்கி கடன் ஆவணம் ஆகியவை ஏற்பட்டதன் அடிப்படையில் 5 முதல் 7 பிரதிவாதிகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என்னை இவ்வழக்கில் விசாரித்த பின்னிட்டு எனது வீட்டை மேல்புறம் கட்டிடம் கட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

4. மேற்படி கட்டிடத்திற்கு செலவு செய்ததது 3 ம் வாதி என்றால் சரிதான். மேற்படி மேல்மாடி கட்டிடம் கீழ்தளத்தில் உள்ள அளவிற்கு அப்படியே மேலே கட்டியுள்ளோம் என்றால் சரிதான். தானசெட்டில் மெண்ட் ஆவணத்தில் மேற்படி சொத்தில் 3 ம் வாதிக்கு மட்டும் தான் உரிமை என்றும், எங்களுக்கு அதில் உரிமை இல்லை என எழுதி கொடுத்துள்ளோம் என்றால் ஆமாம். 3 ம் வாதி என்னுடன் வசிக்கிறாரா என்றால் சென்னையில் கல்லூரி பேராசியராக இருக்கிறார். 3 ம் வாதி இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பாரா என்றால் சாட்சி அளிப்பார். தற்போது இவ்வழக்கு சொத்துக்களை பொறுப்பில் 3 ம் வாதி தான் உரிமையாளர் என்று சொல்லும் நிலையில் இவ்வழக்கில் எனக்கு சாட்சியம் அளிக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனது சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் பொய்யானது என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடியாக வேண்டுகிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**
Kulithalai.